Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 314/2024

2025-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | எடை போடும் வேலை |
| பெயர். | - | சுப்பிரமணி | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | ராமலிங்கம் | சமயம் | - | |
| கிராமம் | - | ஏனாதிமங்கலம் | வயது | - | 57 |

18.06.2025

1, 3 எதிரிகள் ஆஜர். 2, 4, 5 எதிரிகள் ஆஜரில்லை, 2, 4, 5 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச 317 மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது ஏனாதிமங்கலம் வசித்து திருவெண்ணெய்நல்லூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் எடை போடும் பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1-ஐ தெரியும். எதிரிகளை தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. சம்பவத்தை நேரடியாக போலீசார் விசாரித்தார்கள், முதலில் விசாரித்த போது நான் கமிட்டியில் வேலை பார்க்கிறேன், எனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லிவிட்டேன்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 30.11.2018 ம் தேதி இரவு 07.00 மணியளவில் லஷ்மிநாராயணன் அவரது இருசக்கர வாகனத்தை அவரது வீட்டின் முன்பு நிறுத்தினார் என்றாலும், அப்போது நந்தினி தெரு நாயை காரணம் காட்டி லஷ்மிநாராயணனை திட்டினார் என்றாலும், அதை லஷ்மிநாராயணன் கேட்டதால் ஜெயபிரகாஷ் நாராயணன் மற்றும் எதிரிகள் அனைவரும் சேர்ந்து அவரை தடியால் அடித்தார்கள் என்றாலும், தடுக்க வந்த விஜயரங்கன், ஷேஷம்பாள்

ஆகியோர்களை எதிரிகள் வைத்திருந்த தடியால் அவர்களை அடித்தார்கள் என்றாலும், பின்பு எதிரிகள் அவர்களை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல.

2. மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்த்துவிட்டு, போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .இல்லை.**

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 314/2024

2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 18-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | எலக்டிரிசியன் வேலை |
| பெயர். | - | சீனிவாசன் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | முருகதாஸ் | சமயம் | - | |
| கிராமம் | - | ஏனாதிமங்கலம் | வயது | - | 26 |

18.06.2025

1, 3 எதிரிகள் ஆஜர். 2, 4, 5 எதிரிகள் ஆஜரில்லை, 2, 4, 5 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச 317 மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது ஏனாதிமங்கலத்தில் வசித்து எலக்டிரிசியன் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மசகரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **அந்த பார்வை மசகரில் உள்ள கையெழுத்து அ.த.சா.ஆ.2** மேற்படி கையெழுத்தை சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு போலீசார் நான் ஊரிலிருந்த போது கையெழுத்து வாங்கினார்கள். எந்த வழக்கிற்காக வாங்கினார்கள் என்று தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 05.12.2018 ம் தேதி 12.00 மணியளவில் சண்டை வழக்கு சம்மந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு போலீசார் வரைபடம் வரைந்தார்கள் என்றாலும், அவர்கள் விசாரணைக்கு நான் சாட்சியாக இருந்து அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி

கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

நான் கையெழுத்திட்ட பேப்பரில் எதவாவது எழுதியிருந்ததா அல்லது வெற்று பேப்பரா என்றால் வெறும் பேப்பர் தான்.

**(Sd/-R.Senthilkumar)**
**D.M-cum-JM,**
**T.V.Nallur.**